ஒரு பேப்பர்
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

ஆசிரியர் குழு:
லண்டன்
**சேயோன் - அ.இரவி**
**மணி - அகிலன்**
கனடா
**தயா - பொன்.விவேகானந்தன்**
பாரிஸ்
**சிறி**
ஜேர்மனி
**சபேசன் - சாந்தி**
சுவிஸ்
**ரேமன் - சந்துரு**
பொறுப்பாசிரியர்
**- கோபி -**
மக்கள் தொடர்பு
**பாலா**
விளம்பரம்
**கௌரி - சிந்து**
அச்சு
**குமார் (ஜெர்மனி)**
வடிவமைப்பு
jasmine studio
முகப்பு வடிவமைப்பு
seven zero graphics
விளம்பர வடிவமைப்பு
**ரஜீவன் - கிரி**
தமிழ் எழுத்துரு உதவி
**சுரதா யாழ்வாணன்**
நிதி – நிர்வாகம்
**முருகானந்தன்**
வழங்கல்
**உதயகுமார்-ராஜு-கரன்**

**உங்கள் தொடர்புகட்கு:**
தொலைபேசி (Tel)
**லண்டன்** 020 8640 4604
020 8286 9327
**பாரீஸ்** 01 7289 8165
**சுவிஸ்** 043 500 0277
தொலைநகல் **(Fax)**
020 8640 6972
ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:
**பணிமனை முகவரி**
**Oru Paper**
**45'B' Crusoe Road**
**Mitcham CR4 3L J**
**Surrey**
மின்னஞ்சல்:
**info@orupaper.com**
இணையம்:
**www.orupaper.com**

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# வீழ்வேன் என நினைத்தாயோ?

**சற்று மாறுதலுக்காக**

எழுதுவது: **சேயோன்**

பாரதியின் ஒரு கவிதையை இப்போது நான் சொல்ல வேண்டும். அது எனக்குள் தருகிற உத்வேகத்தை வார்த்தைகளில் சொல்லி விட முடியாது. கவிதையை முழுமையாகவே இதில் பதிக்கிறேன்.

'தேடிச் சோறு நிதம் தின்று பல
சின்னஞ்சிறு கதை பேசி – மனம்
வாடி துன்பம் மிக உழன்று பிறர்
வாடப் பல செயல் புரிந்து – நரை
கூடி கிழப்பருவம் எய்தி கொடுங்
கூற்றுக்கு இரையெனப் பின் மாயும் பல
வேடிக்கை மனிதரைப் போலே நான்
வீழ்வேன் என நினைத்தாயோ'

பொருள் புரிகிறதுதானே? அல்லது சொல்லவோ? ஒவ்வொரு நாளும் சோறு தின்று பல சின்னத்தனமான கதைகள் பேசி, மனம் வருந்தி துன்பத்தில் உழன்று, மற்றவர்கள் வேதனைபடத்தக்க பல செயல்கள் செய்து, மயிர் நரைத்து, கிழப்பருவம் அடைந்து, கொடுமையான யமனுக்கு இரையாக தன் உயிரைக் கொடுத்து இறந்து போகிற ஏனைய வேடிக்கையான மனிதர்களைப் போல நானும் அப்படியான ஒருவனாகி வீழ்வேன் இறந்துபடுவேன் என்று நினைத்தாயோ?

இல்லை, இயலாது அப்படி ஒருவராலும் என்னை விழ்த்திவிட முடியாது. என் கவியில், செயலில், பணியில் நான் உயிர்த்தெழுவேன் உயிர்த்தே எழுவேன். இதைத்தானே சொன்னார் பாரதியார்?

உங்கள் எல்லோரையும் போல ஒருவனல்லன் நான். நீங்கள் விடுப்பு விண்ணாளம் கதைப் பீர்கள். சின்னத்தனமானது எல்லாம் செய் வீர்கள். மற்றவர் வேதனைப் படும்படியாக காரியம் செய்வீர்கள். பழிதீர்ப்பீரகள். ஒரு பாவத்துக்கும் அஞ்சவும் மாட்டீர்கள். காட்டிக் கொடுப்பீர்கள். கயவாளித்தனம் புரிவீர்கள், கொன்று குவிப்பீர்கள், குழிதோண்டிப் புதைப்பீர்கள். புதைத்துவிட்டு மண்ணைத் தட்டி விட்டு கோயிலுக்கு கும்பாபிசேகம் செய்யப் போய்விடுவீர்கள். நயவஞ்சகமும், நரித்தனமும் கலந்து கட்டி அடிப்பீர்கள். போலியாக இருப்பீர்கள் போக்கிரி வேலை செய்வீர்கள் நாச வேலை செய்வீர்கள், நம்பவைத்துக் கழுத்தறுப்பீர்கள். ஏதும் இரக்கம் இல்லை, எள்ளளவும் மனிதாபிமானம் இல்லை.

இப்படியான ஒருவர் இல்லை பாரதியார். அவர் துன்பப்பட்டார், துவண்டார், ஏழ்மையில் உழன் றார், ஏதுமில்லாக் கொடுமையில் உழன்றார். ஆனால் ஆருக்கும் வஞ்சகம் செய்ததில்லை, வாழ்வைக் கெடுத்ததில்லை. அதனால்தான் அவரால் பாடமுடிகிறது.

'வீழ்வேன் என நினைத்தாயோ'

சாதாரண வாழ்வை பாரதியார் வாழவில்லை. எல்லோரையும் போல வெறுமனே உண்டு, உடுத்து, உறங்கிச் சீவிக்கவில்லை. தனக்கென்று வீடில்லை, வசதியில்லை, தனக்காக வாழவுமி ல்லை. மனிதர்களுக்காக வாழ்ந்தார். மற்றும் தன் தேசத்திற்காக வாழ்ந்தார். தமிழுக்காகவும் வாழ்ந்தார் எனலாம். எல்லாவற்றுக்கும் மேலாக மனிதனாக வாழ்ந்தார். சிறுமை கண்டபோது பொங்கியெழுந்தார். சீறிச்சினந்தார். 'வயிரமுடைய நெஞ்சு வேண்டும்' என்று பாப்பாக்களுக்கு பாடிய பாரதியார்தான் இதைனையும் பாடுகிறார்.

'பாதகம் செய்பவர்களைக் கண்டால்
பயம் கொள்ளல் ஆகாது பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா'

பாதகம் செய்பவர்களைக் கண்டால் பயப் பிடாதே. மோதி மிதித்து விடு. அதை உன்னால் செய்ய இயலாதா? நீ சின்னப்பாப்பா, புரிகிறது உன்னால் மோதி மிதிக்க முடியாவிட்டாலும், அந்தப் பாதகர்களின் முகத்தில் உன்னால் காறித் துப்ப இயலும் தானே? அதைச் செய் என்று பாரதியார் பாப்பாக்களுக்குப் பாடுகிறார்.

பாரதியார் தான் சொல்கிறார்: 'ரௌத்திரம் பழகு'அதாவது ஏதாவது ஒரு அநீதி நிகழ்ந்தால் அந்த இடத்தில் ஆத்திரப்பட வேண்டும். அதை நீ பழகு, என்கிறார் பாரதியார். அதாவது சிறுமை கண்டபோது பொங்கி எழு என்பதுதானே அதன் பொருள். அப்படித்தான் 'பாஞ்சாலிசபதத்தில்' இன்னொன்றையும் பாரதியார் சொல்கிறார்:

'அழுவோமோ நாங்கள் ஆண் பிள்ளை
அல்லவோ
உயிர் எமக்கு வெல்லமோ'

நாங்கள் அழுதுகொண்டிருக்கப்போகிறோமா? நாங்கள் ஆண்பிள்ளை அல்லவா? உயிர் நமக்கு ஒரு பொருட்டா? அது என்ன வெல்லக்கட்டியா? இப்படியெல்லாம் திறன் வாய்ந்த பாரதியாரால்தான் இப்படிப் பாட முடிகிறது.

'வீழ்வேன் என நினைத்தாயோ'

பாரதியார் சொன்னதைச் செய்தார். செய்ய முடிந்ததைச் சொன்னார். 'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்று பாரதியார் மட்டுமே பாட முடியும். அல்லது 'உயிர்களிடத்து அன்பு வேண்டும்' என்று பாடும் தகுதியும் பாரதியாருக்கு உண்டு.

வீட்டில் ஒரு சிறிதும் உணவு இல்லை. பாரதி யாரின் மனையாள் செல்லம்மா யாருடையதோ வீட்டில் கொஞ்சம் அரிசி இரந்து வருகிறார். பாரதியார் அரிசி மணிகளை குருவிக்கு விதைத்து குருவிகள் உண்பதைப் பார்த்து மகிழ்கிறார். அதனால்தான் காக்கை குருவி எங்கள் ஜாதி என்கிறார்.

பாரதியார் தன் செயலில் கவியில் உயிர்த் தெழுந்தவர். ஆனால் ஒன்றுக்கும் வழியில் லாதவர். வாழ வில்லங்கப்பட்டவர். அதுதான் சக்தியிடம் வேண்டுகிறார்:

'சொல்லடி சிவசக்தி எனை
சுடர் மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே'

சிவசக்தி பாரதியாருக்கு வல்லமை கொடுத் தாளோ, இல்லையோ பாரதியார் வாழ்ந்தார். இப்போதும் வாழ்கிறார். அதனால் தான் பாரதியாரால் பாடமுடிகிறது.

'நான் வீழ்வேன் என நினைத்தாயோ'

# ஒழுக்கம்

**வள்ளுவர் காட்டும் வழி**

எழுதுவது: **இராம. கே. நாதன்**

ஒருவன் வாழ்வில் எவ்வளவுதான் பொருளா தார ரீதியில் அல்லது உத்தியோக நிலையில் வெற்றி பெற்றிருந்தாலும், அவன் ஒரு ஒழுக்க சீலனாக வாழ்ந்தாலன்றி, அவனைச் சமூகம் மதியாது. வெளிப்படையாகச் சிலர் தமது சொந்தத் தேவைகளுக்காக அவனை மதிப்பவர்கள் மாதிரிக் காட்டிக்கொண்டாலும், அவர்களது அடிமனதில் அவனைப் பற்றி இழிவாகவே நினைத்துக் கொள்வர்.

எனவேதான், ஒழுக்கம் ஒருவனது வாழ்வின் மேம்பாட்டிற்கும், அவனது சிறப்பிற்கும் அவசிய மானதொன்றாக அமைகிறது. ஒருவனது பதவியி லிருந்தோ அல்லது பொருளாதார மேம்பாட்டிலிரு ந்தோ ஒருவனுக்குக் கிடைக்கக்கூடிய மரியாதை யாவும் அவன் ஒரு ஒழுக்க சீலனாக இருக்கு மிடத்து மாத்திரமே, அவனுக்குக் கிடைக்கப் பெறும். அதனாலேயே ஒருவனுடைய ஒழுக்கநெறி அவனது உயிரிலும் மேலான பெருமையுடையதாகிறது. (குறள் 131).

ஒழுக்க நெறியானது, பதவியில் இருப்போர் களுக்கும், செல்வந்தர்களுக்கும் மாத்திரம் அவசியமானதொன்றன்று. கற்றோருக்கும், ஞானி யர்க்கும் இது மிகவும் அவசியமானதாகின்றது. எனவே, யாராக இருப்பினும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பது அவசியமாகும். (குறள் 132)

ஒருவன் மேற்குடியில் பிறந்தவன் என்பதாலோ அல்லது கீழ்க்குடியில் பிறந்தவன் என்பதாலோ ஒருவனை அடையாளம் காட்ட முடியாது. ஆனால், ஒருவன் எத்தகைய ஒழுக்கத்தைக் கொண்டிருக்கின்றான் என்பதே அவனுடைய குடிமையை அடையாளப்படுத்தும்

நல்லொழுக்கத்தை உடையவர்களே உயர்ந்த குடியினராகக் கணிக்கப் பெறுவர். அதாவது, ஒருவன் எக்குடியில் பிறந்தான் என்பதிலும் பார்க்க அவனது ஒழுக்கமே அவனை மேற்குடி, கீழ்க்குடி என அடையாளம் காட்டும். (குறள் 133)

ஒருவன் தான் கற்ற கல்வியை மறந்தால் அதைத் திரும்பவும் கற்றுக் கொள்ள முடியும். வேதங்களை மறந்தாலும் அவற்றைத் திரும்பவும் அறிந்து கொள்ள முடியும்.

ஆனால், மறைநெறி தெரிந்த அறிஞர்களோ அன்றி பரம்பொருளை தம் அறிவினால் அறிந்து கொள்ளும் ஞானியர்களோ தம் ஒழுக்கத்திலிருந்து தவறினார்களேயானால், அது அவர்களுடைய குடிப்பெருமையையே தாழ்த்திவிடும். அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்படுவர். (குறள் 134).

ஒருவன் வாழ்வில் முன்னேற்றம் அடை வதற்கும், செல்வத்தைச் சேர்ப்பதற்கும் அவனி டம் ஒருமுக்கியமான குணாம்சம் இருத்தல் வேண்டும். அதுவே பிறரிடத்தில் பொறாமை கொள்ளாதிருத்தல். பிறர்மீது பொறாமை கொள்பவனிடத்தில் செல்வம் சேராது.

அதைப் போலவே வாழ்வில் உயர்நிலை அடைய வேண்டும் என விரும்புபவர்களிடம் இருக்க வேண்டிய முக்கியமான குணாம்சங்களில் ஒன்று நல்லொழுக்கமாகும். நல்லொழுக்கம் இல்லாதவன் வாழ்வில் உயர்வு கிடையாது. உயர்வு அடைய வேண்டும் என விரும்புபவர்கள் ஒழுக்கசீலராக வாழ்தல் அவசியம். (குறள் 135)

எவ்வளவுதான் பிறருடைய தூண்டுதல்கள் இருந்தாலும், அல்லது பிழையான வழிகளில் செல்லும் சந்தர்ப்பங்கள் எதிர்ப்பட்டாலும் ஒழுக்கசீலர்கள் தம் வழியில் இருந்து விலகிச் செல்லமாட்டார்கள்.

ஏனெனில், சரியான பாதையிலிருந்து விலகிச் செல்வதனால் ஏற்படும் தீமைகளை அவர்கள் நன்கு அறிவார்கள். அதனால், நல்லொழுக்கமுடையோர் தாம் செய்யவேண்டிய சரியான செயல்முறைகளிலிருந்து விலகிப்போக மாட்டார்கள். (குறள் 136)

ஒருவருடைய பெருமை அவர் கடைப்பிடிக்கும் வாழ்வியல்புகளிலேயே தங்கியுள்ளது. ஒழுக்க மான வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடிப் போரின் வாழ்க்கை சிறந்து விளங்கும். தீய ஒழுக்கங்களுக்கு இடங்கொடுப்போர் பிறரின் பழிச்சொற்களுக்கு ஆளாவார்கள். அவர் களின் வாழ்க்கையும் துன்பத்திலேயே அமிழ்ந்து அழிந்துவிடும். (குறள் 137).

ஒருவன் நல்லொழுக்கத்துடன் நடந்து கொண்டால் அதுவே பிறருடைய நன்மையைக் கொண்டுவரும் ஒரு தூண்டுகோலாக அமையும். நல்லொழுக்கத்துடன் வாழும் ஒருவன் பிறர் நன்மை கருதியே வாழ்வான். அவனால் பிறர் நன்மை பெறுவர். ஆனால், தீய ஒழுக்கமோ அவனுக்கு மாத்திரமன்றி அவனைச் சுற்றியுள்ள மற்றையோருக்கும் துன்பத்தையே கொண்டு வரும். (குறள் 138)

ஒழுக்கம் என்பது ஒருவர் நடத்தையில் மட்டுமன்றி, அவரின் பேச்சிலும் பிரதிபலித்தல் வேண்டும். நல்லொழுக்கம் உள்ளவர்கள் தமது பேச்சிலும் ஒழுக்கத்தையே கடைப்பிடிப்பார்கள். அவர்கள் தம் பேச்சில் தீய சொற்களை உபயோகப் படுத்தமாட்டார்கள் வீணாக மற்ற வர்கள் மேற் பழிசுமத்தமாட்டார்கள். குற்றம் சொல்லமாட்டார்கள். எனவே, ஒழுக்கம் என்பது சொல்லிலும் செயலிலும் காட்டப்படல் வேண்டும். (குறள் 139).

ஒருவர் எவ்வளவுதான் பல நூல்களைக் கற்றவராக இருந்தாலும், உலகத்தவரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்கநெறிகளைப் பின் பற்றி, உலகநியதிகளை ஏற்காதவர்களாக இருப்பின், அவர்கள் கற்றும் கல்லாத மூடர்களே யாவார். எவ்வளவுதான் அறிவு பெற்றிருந்த போதும், உலகோடு ஒத்து உலகநீதிகளோடு ஒத்துப்போய்வாழ்வதேகற்றோரின்கடமையாகும். (குறள் 140).